**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE QUARRY UNIT OF M/s. R JANARDHANAN ROUGH STONE QUARRYAT S.F.No. 419 (PART – 9) OF VINNAMANGALAM VILLAGE, AMBUR TALUK,TIRUPATHUR DISTRICT ON 11.07.2025 AT 11.00 AM IN M/s ASHOK MAHAL, M.C ROAD, CHENNAI – BANGALORE NATIONAL HIGHWAY, ALANKUPPAM VILLAGE, AMBUR TALUK, TIRUPAHUR DISTRICT.**

**Present:**

| | | |
|---|---|---|
| 1. **Tmt. J. Ajitha begum** | : | Revenue Divisional Officer,<br>Vaniyambadi,Tirupathur District. |
| 2. **Thiru.Er.C.Tholkappiyan** | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board<br>Vaniyambadi,Tirupathur District |

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi.**

At the outset, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi has welcomed the Revenue Divisional Officer, other Government officials, NGOs, Environmentalists and all the Public present in the public hearing meeting. He briefed the project proposal of Rough Stone Quarry proposed at Vinnamangalam Village, Ambur Taluk and Tirupathur District explaining that the above projects falls under the 'B1' Category under Schedule 1A of Environment Impact Assessment (EIA) vide Notification No. S.O 1533 dated 14.09.2006 issued by the Ministry of Environment, Forest and Climate Change as they forms a cluster of more than 5 Hectares area and therefore it is necessary to conduct public hearing meeting to obtain Environmental Clearance for the 06 quarry projects from the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai.

Then DEE, TNPCB requested the Sub-Divisional Magistrate/Revenue Divisional officer, Vaniyambadi to preside over and conduct the public hearing meeting. RDO welcomed all and has informed that she was deputed by the District Collector, Tirupathur District to preside over the meeting on behalf of the District

administration and explained the procedure to be adopted during the meeting and commenced the meeting.

Subsequently, District Environmental Engineer, Vaniyambadi, Tirupathur District has requested the project consultant to present the proposed project details one by one and requested the public & NGOs and others gathered in the meeting Hall to give their opinion, concerns, clarification after the presentation.

**Technical Presentation, M.Vijayaragavan, Environmental Consultant, GeoTechnical Mining Solution, Dharmapuri**

The Project Consultant, Geo Technical Mining Solution, Dharmapuri on behalf of Project proponent of the quarry has presented the details of the project of M/s R Janardhanan Rough Stone Quarry through power point presentation.

He explained that stone quarry of M/s R Janardhanan Rough Stone Quarry at SF No 419 (PART – 9) at an extent of 0.80.0 Hectare of Vinnamangalam Village, Ambur Taluk, Tirupathur District. He also informed that Press release for the public hearing meeting to this quarry was already published in Daily English and Tamil Newspapers ("Times of India" and "Dhinakaran" respectively) was published on 07.06.2025after getting the approval of the District Collector, Tirupathur for conducting public hearing meeting on 11.07.2025 at 11.00 am. He also detailed the impact on Environment due to the project and Environment manage plan, requirement of man power, etc.,

**District Environmental Engineer,TNPCB, Vaniyambadi, Tirupathur District.**

After completion of the presentation, District Environmental Engineer has requested the public to introduce themselves with their name and village before speaking to express their suggestions, concerns and clarifications about this project and also assured that their views will be recorded both Audio & video and will be submitted to the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai for further consideration for the issue of Environmental clearance.

## Thiru. Vadivel Subramanium, Tamil Nadu Farmer's Protection Movement

He says that,

- "Public has not received any advertisement regarding the public hearing meeting regarding the proposed quarry projects and there are already 6 quarries are operating in the same area, there is no need for the government to permit new quarries. Operation of the quarries will severely affect local biodiversity and environment in the vicinity.
- Quarries require heavy investments but it's generating very few employment opportunities for the local people.Quarry operations lead to the depletion of groundwater resources.
- There are already 06 quarries in operation in this area. From the roads, one can clearly see that massive amounts of mineral resources have already been extracted. Establishing new quarries would require the destruction of thousands of trees and there is no justification from the government.
- This new project claims to reduce noise pollution, planting of trees and protection against water depletion. However, dust from those stone quarries has destroyed farmlands and even livestock are unable to drink the water.
- There is a protected forest which is 1.34 km away from the proposed quarry. A quarry being very close to protected ecosystems will cause environmental degradation. Additionally, schools and government offices are located nearby the proposed quarry.
- Quarry operations will affect the water, air and the surrounding environment. So, we cannot permit the proposed quarry to be established on my land ".

## Thiru. Gowtham, Vinnamangalam:

He says that,

- "Below the proposed M/s.Janarthanan quarry site, 4.5 acres of agricultural land still remains green and fertile. Furthermore, even after paddy was harvested, no form of pollution was detected.
- In slides 13 and 16 of the stone quarry project presentation, it has been stated that the green belt area will be expanded. Designated officials should monitor

the development of the green belt in / around the stone quarry and suggestion may give for improvements. The quarried material is used for laying road and house construction.

- The minerals obtained from the stone quarry are used for construction of roads and houses. As there are no adverse impacts, we welcome the quarry project ".

**<u>Thiru. Muthukrishnan, Vaniyambadi (Coordinator, Naam Tamilar Katchi)</u>**

He says that,

- " There have been no public protests in support of establishing a stone quarry and there is no advertisement made and conveyed no information about the stone quarry to the public.
- The operation of the quarry generates dust which causes respiratory problems, Quarry operations are leading to the destruction of natural environment.
- News, advertisements, and posters have not reached the public about the public hearing meeting on newly proposed quarries. People have opposed the proposed quarry.
- The quarry that is currently operating will meet today's needs and may become exhausted and unavailable for future generations. In reality, the quarry functioning in our village does not provide any meaningful benefit to us".

**<u>Thiru. Pon Mohan, Vinnamangalam</u>**

He says that,

- " My land is located nearer to the quarry and the dust emissions from the quarry is affecting my farmland. Government should provide relief for my land and water is being sprayed on the village roads (roads used by quarry vehicles) three times a day by quarry owners. However dust generated by quarry operations is affecting agriculture.
- If the quarry operates in this area, compensation must be provided to the affected formers. Around the quarry, there are mango and tamarind groves spread across 10 acres. The quarry owners have provided the full funding for

laying both the tar road and the panchayat road located within the Vinnamangalam Panchayat.

- There are orchards spread across 10 acres surrounding the quarry.The proposed quarry area trees should be planted and maintained in advance and only then permission should be granted for quarry operations. Lorries/Trucks were not operated from quarries during school hours and water is being sprayed on the roads three times a day used by them. Therefore, the quarry causes no harm to us".

**Thiru. Murali &Thiru. Manikandan, Vinnamangalam (Kattukollai)**

He says that,

- "He has 07 acres of land near the proposed quarry site. They are planted and maintained mango, coconut, and palm groves nearby the quarry. At the jelly factory, water is being sprayed and compound walls are constructed to prevent dust emission generated during the operation of the quarry.
- Trucks/lorries are not operated by the quarries during 8 – 9 am in the morning session so as to avoid accidents of the children during school time and water is being sprayed on roads to prevent dust emission.
- The required amenities for our panchayat are being provided by quarry owners. There is no negative impact from the upcoming proposed quarry projects".

**Thiru.Vijayaprabakaran, Vinnamangalam**

He says that,

- " The noise due to blasting from the existing quarries is audible in our village. and we don't have the access to potable water from the existing and proposed quarries.
- Hence, there is no need for new proposed stone quarry in our village".

**Thiru. R.K. Tamil, Kennadikuppam**

He says that,

- "Books were distributed to the school students by the owners of the quarry and water is being sprayed twice in daytime on the roads. (Morning and evening) so as to prevent dust emission.
- I support for the establishment of the quarry".

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi, Tirupathur District.**

District Environmental Engineer thanked the Revenue Divisional Officer and all the public and NGOs who have participated in the public hearing meeting and the meeting came to the end.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Daily Newspaper Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing (Total pages 15 & 117 persons)
3. Copy of Audio & Video (DVD – Disc 1 & Pen drive) of the public hearing proceedings.

24/07/2025

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Vaniyambadi, Tirupathur District.

24/07/25

Revenue Divisional Officer,
Vaniyambadi,
Tirupathur District.

**திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், விண்ணமங்கலம் கிராமம், அரசு புறம்போக்கு நிலத்தில் ச.எண்.419 (பிரிவு–9), 0.80.0 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஜனார்த்தனன் கல் குவாரி நிறுவனத்தின் திட்ட பணிக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் 11.07.2025 முற்பகல் 11.00 மணி மணியளவில் தி/ள். அசோக் மஹால், M.C. ரோடு, சென்னை–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை, ஆலங்குப்பம் கிராமம், ஆம்பூர் வட்டம், திருப்பத்தூர் மாவட்த்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரம்:**

**பங்கேற்றோர்:**

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. J. அஜிதா பேகம் | வருவாய் கோட்டாட்சியர்,<br>வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் |
| 2. | Er. சி. தொல்காப்பியன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் |

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி**

வருகை புரிந்துள்ள மாவட்ட வருவாய் கோட்டாட்சியர், வாணியம்பாடி அவர்களை வரவேற்று,

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், விண்ணமங்கலம் கிராமம், அரசு புறம்போக்கு நிலத்தில் ச.எண்.419 (பிரிவு–9), 0.80.0 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஜனார்த்தனன் கல் குவாரியை இயக்குவதற்கு மாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுசூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் இன்று நடைபெற உள்ளது. சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை

2006ன் படி 5.00 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேல் கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூகநல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய் மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். ஜனார்த்தனன் கல் குவாரி நிறுவனத்திற்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். அசோக் மஹாலில் 11.07.2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறுமென டைம்ஸ் ஆப் இந்தியா மற்றும் தினகரன் செய்திதாள்களில் 07.06.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவித்துக்கொள்ளலாம் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்திற்கு மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் (Sub Divisional Magistrate) / வாணியம்பாடி அவர்களை தலைமையேற்று நடத்தி தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டார்.

**தொழில்நுட்ப விளக்க வல்லுநர்,** எம்.விஜயராகவன், சுற்றுச்சூழல் ஆலோசகர், ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யூஷன், தர்மபுரி தி/ள். ஜனார்த்தனன் கல் குவாரி திட்டம் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி**

பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். தங்களுடைய கருத்துகளை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டார்.

**திரு. வடிவேல் சுப்பிரமணியன், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு இயக்கம், வாணியம்பாடி**

- குவாரி தொடர்பான கருத்து கேட்பு கூட்டத்திற்கு முறையான அறிவிப்பு பொதுமக்களுக்கு சென்றடையவில்லை.
- ஏற்கனவே குவாரிகள் இருக்கும் போது மீண்டும் புதிதாக 06 கல் குவாரிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?
- குவாரியின் செயல்பாட்டால் பல்லுயிர் சூழல் சுற்றுச்சூழல் இப்பகுதியில் பாதிப்பு ஏற்படும்.
- குவாரியில் முதலீடு அதிகம் ஆனால் வேலைவாய்ப்பு மிகவும் குறைவு.
- குவாரியின் செயல்பாட்டால் நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்படும்.
- இங்க ஏற்கனவே 6 குவாரிகள் இயங்கி கொண்டு இருக்கிறது. ரோடுகளில் இருந்து பார்க்கும்போது அதிக கனிம வளங்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. குவாரி அமைந்துள்ள இடத்தில் ஆயிரக்கணக்கான மரங்களை அழித்துத்தான் குவாரி செயல்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்திற்கு என்ன அவசியம் உள்ளது
- இந்த திட்டத்தில் ஒலி மாசு குறைப்போம், மரம் நடுவோம், சுற்றுச்சூழல் மற்றும் நீர் மாசுபாட்டை குறைப்போம் என்று காணொலி விளக்கப்படத்தின் மூலமாக சொல்லப்பட்டது, இதற்கு முன்பு அமைந்துள்ள குவாரிகளின் உரிமையாளர்கள் என்ன செய்தார்கள். கல் குவாரிகளிலிருந்து வரும் மண் துகள்களால் விவசாயம் கெட்டு போய்விட்டது. கால்நடைகள் தண்ணீர் குடிக்க முடியவில்லை.
- திட்ட அறிக்கையில் 1.34 கிமீ தொலைவில் காப்பு காடுகள் இருக்கு, காப்பு காடுகளுக்கு அருகில் குவாரி அமைவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். குவாரிக்கு அருகில் பள்ளி கூடம் மற்றும் அரசு அலுவலகங்கள் இருக்கிறது.

- குவாரி அமைவதால் நீர், சுற்றுச்சூழல், காற்று பாதிப்பு ஏற்படும். சுற்றுச்சூழல் பாதிக்கும் என் மண்ணில் குவாரி அனுமதிக்க முடியாது.
- எனவே புதிகாக வரும் கல் குவாரிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.

**<u>திரு. கவுதம், விண்ணமங்கலம்</u>**

- தி/ள் ஜனார்தனன் கல் குவாரிக்கு கீழ் பகுதியில் 4.5 ஏக்கர் விவசாய நிலம் இன்னும் பசுமையாக உள்ளது,
- மேலும் நெல் அறுவடைசெய்யப்பட்டும் எந்தவித மாசும் கண்டறியப்படவில்லை,
- காணொலி நிழற்படத்தில் கல் குவாரியின் 13 மற்றும் 16 slideல் பசுமை வளையம் அதிகரிக்கப்படும் என்று கூறியுள்ளார்கள்.
- கல் குவாரியால் பசுமை வளையம் அமைவதை தனி அதிகாரிகள் பார்வையிட்டு அதனை improve செய்யலாம்.
- கல் குவாரியலிருந்து எடுக்கப்படும் கனிம வளங்கள் ரோடு மற்றும் வீடு கட்டுவதற்கு பயன்படுகிறது. இதனால் எந்த பாதிப்பும் இல்லை, ஆகவே குவாரி வருவதை நாங்கள் வரவேற்கிறோம்,

**<u>திரு. முத்துகிருஷ்ணன், வாணியம்பாடி (நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர்)</u>**

- கல் குவாரி வேண்டுமென்று எந்த ஒரு பொதுமக்களும் போராட்டம் நடத்தவில்லை,
- எந்த ஒரு விளம்பரமும் புதியதாக அமையவுள்ள கல் குவாரி தொடர்பான செய்தியை மக்களுக்கு தெரிவிக்கப்படவில்லை,
- குவாரி செயல்பாட்டால் தூசுகள் உருவாகி சுவாசக்கோளாறு ஏற்படுகிறது,
- குவாரிகள் செயல்பாட்டால் இயற்கை அழிகிறது,
- செய்திகள், விளம்பரம், சுவரொட்டிகள் மக்களை சென்றடையவில்லை,

- நான் இந்த மண்ணை சேர்ந்தவன். கருத்து கேட்பு நடக்கும் போது விளம்பரப்படுத்தவில்லை.
- இன்றைய தேவைக்காக செயல்படும் கல்குவாரி, அடுத்த தலைமுறைக்கு இல்லாமல் போய்விடும். நம் ஊரில் செயல்படும் குவாரியால் நமக்கு ஏதாவது பயன்படுகிறதா, எனவே கல் குவாரிக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.

**<u>திரு. பொன் மோகன், விண்ணமங்கலம்</u>**

- சாலைகளுக்கு 3 முறை தண்ணீர் தெளிக்கப்பட வேண்டும்.
- எனது நிலம் குவாரிகளுக்கு அருகில் உள்ளது. குவாரியிலிருந்து வெளியேறும் தூசிகளினால் விவசாய நிலம் பாதிக்கப்படுகிறது. இதற்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும். எனவே புதிய குவாரி செயல்பட்டால் உரிய உதவி தொகை அளிக்க வேண்டும். குவாரியை சுற்றி மாந்தோப்பு, புளியந்தோப்பு – 10 ஏக்கரில் வைத்து இருக்கிறார்கள், விண்ணமங்கலம் பஞ்சாயத்தில் அமைந்துள்ள தார் சாலை மற்றும் பஞ்சாயத்து ரோடு போடுவதற்கு ஒட்டு மொத்த பணமும் குவாரி உரிமையாளர்கள் கொடுத்துள்ளார்கள்.
- விண்ணமங்கலத்தில் ஏற்கனவே உள்ள குவாரி உரிமையாளர்களால் சாலை வசதி செய்து கொடுத்தனர். எனவே முன் கூட்டியே செடிகள் நடப்பட்டு உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும், பின்பு 6 குவாரிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.
- பள்ளி நேரங்களில் லாரிகள் இயக்கப்படுவதில்லை, காலை/மதியம்/மாலை நேரங்களில் லாரிகள் செல்லும் ரோடுகளில் தண்ணீர் தெளிக்கிறார்கள், அதனால் இந்த குவாரி வருவதால் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

**<u>திரு. முரளி மற்றும் திரு. மணிகண்டன், விண்ணமங்கலம் (காட்டுக்கொல்லை)</u>**

- ஜல்லி பேக்டரி வரும் இடத்திற்கு பக்கத்தில் என்னுடைய 7 ஏக்கர் நிலம் இருக்கிறது, அதன் அருகில் மா, தென்னை, பனந்தோப்பு இருக்கிறது.

- ஜல்லி பேக்டரியில் தண்ணீர் தண்ணீர் தெளித்து சுற்றுச்சுவர் அமைத்து தூசு வெளியேறாமல் தடுக்கப்படுகிறது.
- 8–9 மணிக்கு மேல் லாரிகள் செல்வதில்லை.
- ரோடுகளில் தூசிகள் பறக்காமல் இருக்க தண்ணீர் விடப்படுகிறது.
- எங்கள் ஊராட்சிக்கு வேண்டிய வசதிகள் செய்து தருகின்றனர்.
- எந்தவித பாதிப்பும் இல்லை,

**திரு, விஜயபிரபாகரன் (விண்ணமங்கலம்)**

- ஏற்கனவே இயங்குகின்ற குவாரிகளிலிருந்து வெளியேறும் வெடிசத்தம் எங்கள் ஊரில் கேட்கிறது. இப்போது இந்த ஊரில் தண்ணீர் குடிப்பதற்கு ஏதுவாக இல்லை. அதனால் புதியதாக கல் குவாரி எங்களுக்கு தேவையில்லை.

**திரு. R.K. தமிழ் (கென்னடிகுப்பம்)**

- பள்ளி மாணவர்களுக்கு குவாரி உரிமையாளர்கள் புத்தகம் வழங்குகின்றனர்.
- குவாரிக்கு செல்லும் சாலைகளில் 2 முறை (காலை, மாலை) தண்ணீர் தெளிக்கப்படுகிறது.
- எனவே எங்களுக்கு குவாரி வேண்டும் என தெரிவித்தனர்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி**

தி/ள் ஜனார்த்தனன் கல் குவாரி நிறுவனத்தின் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றதாக தெரிவித்துக்கொண்டார்.

இந்த கருத்து கேட்பு கூட்டத்தை சிறப்பாக நடத்தி கொடுத்த துணை கோட்டாட்சியர் (Sub Divisional Magistrate) / வருவாய் கோட்டாட்சியர், வாணியம்பாடி அவர்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் பொது மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார். இந்த கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் அனைத்து பொதுமக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் மற்றும் பத்திரிக்கை நண்பர்கள் அனைவருக்கும்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

**இணைப்பு:**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் கலந்த கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல் (மொத்த பக்கம் 15 மற்றும் நபர்கள் 117)
3. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்

24/07/2025

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்

24/07/25

வருவாய் கோட்டாட்சியர்,
வாணியம்பாடி
திருப்பத்தூர் மாவட்டம்